சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.209/2022

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20–ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர் – வெங்கடகிருஷ்ணன் தொழில்

(Pw2 )

| | |
|---|---|
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

நான் வீரசோழன் சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்த வந்த அழைப்பாணையின் பேரில் நான் ஆஜராகியுள்ளேன். இந்த வழக்கின் நான் 11 ம் பிரதிவாதியாக இருந்து வருகிறேன். எங்களது தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை. சார்பதிவாளர், வீரசோழன் என்னை சாட்சியம் அளிக்க அனுமதித்து கடிதம் ஒன்று கொடுத்துள்ளார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 8 ஆவணத்தின் படி கணபதி, ராஜேந்திரன் ஆகியோர்கள் பரமேஸ்வரி என்பவருக்கு கிரையம் எழுதிக் கொடுத்துள்ளார். இந்த ஆவணத்தில் உள்ள சர்வே எண் 108/2 ஆகும். அதன் நான்குமால் எங்கள் (கணபதி, ராஜேந்திரன்) பாக புஞ்சைக்கு மேற்கு, தி.கோபால்சேர்வை பாக புஞ்சைக்கு வடக்கு, எம்.கணேசன்

சேர்வை புஞ்சைக்கும் கிழக்கு, ரோட்டுக்கும் தெற்கு. இதற்குள் 5 செண்டு கட்டுள்ளப்பட்டுள்ளது என கண்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 9 ஆவணத்தினை எழுதிக்கொடுத்தவர் K.பரமேஸ்வரி, எழுதி வாங்கியவர் V.சேகர். சர்வே எண். 108/2. செண்டு 61 ல் வடபுறம் செண்டு 20 ல் மேற்புறம் செண்டு 5 என்று கண்டுள்ளது. கிழக்கில் தி.கணபதிசேர்வை, க.ராஜேந்திரன் இவர்களது பாக புஞ்சை நிலம், மேற்கு எம்.கணேசன் சேர்வை புஞ்சை நிலம், வடக்கு ரோடு, தெற்கு கோபால்சேர்வை பாக புஞ்சை நிலம். வா.சா.ஆ 8 மற்றும் வா.சா.ஆ 9 ல் உள்ள நான்குமால்கள் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ 10 யை எழுதிக்கொடுத்தவர் V.சேகர், எழுதி வாங்கியவர் M.பாண்டி. சர்வே எண். 108/2. செண்டு 61 ல் வடபுறம் செண்டு 20 ல் மேற்புரம் செண்டு 5. கிழக்கு தி.கணபதிசேர்வை, க.ராஜேந்திரன் இவர்களது பாக புஞ்சை நிலம், மேற்கு சமையன் புஞ்சை நிலம், வடக்கு சர்வே எண் 106 ரோடு, தெற்கு தி.கணபதிசேர்வை, க.ராஜேந்திரன் இவர்களது பாக புஞ்சை நிலம். வா.சா.ஆ 9 மற்றும் வா.சா.ஆ 10 ல் தெற்கே முறையே கோபால்சேர்வை பாக புஞ்சை நிலம் என்றும், தி.கணபதிசேர்வை, க.ராஜேந்திரன் இவர்களது பாக புஞ்சை நிலம் என்று மாற்றி எழுதப்பட்டிருக்கிறது. வா.சா.ஆ 9 மற்றும் வா.சா.ஆ 10 ல் மேற்கே M.கணேசன் சேர்வை புஞ்சை நிலம் என்றும், சமையன் புஞ்சை நிலம் என்று மாற்றி எழுதப்பட்டிருக்கிறது. பொதுவாக நான்குமாலில் மாறுதல் செய்ய வேண்டும் என்றால் கிராம நிர்வாக அதிகாரியிடம் எழுதி வாங்கிக்கொண்டு அதன் பின்பு மாற்றம் செய்யப்படும் என்றால் சரிதான். அது போன்று VAO சான்று எதுவும் மேற்படி ஆவணத்துடன் இணைக்கப்படவில்லை. எனவே வா.சா.ஆ 9 மற்றும் வா.சா.ஆ 10 ல் முரண்பாடு உள்ளது என்றால் சரிதான்.

நான்குமாலில் ஒரு திசையில் மாறுதல் ஏற்பட்டாலும் சொத்தின் அமைப்பை மாற்றி விடும் என்றால் சரிதான். சர்வே எண். 108/2 கிற்கான வில்லங்க சான்றிதழை **சா.சா.ஆ 1** ஆக தாக்கல் செய்கிறேன். ஆவண எண். 831/2023, தேதி 16.07.2023 . அதில் எழுதி கொடுப்பவர் பெயர் சேகர், எழுதி வாங்கியவர் பெயர் பாண்டி மேலும் நான்குமாலில் கீழ்கண்டவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. கிழக்கு –தி.கணபதிசேர்வை புஞ்சை நிலம், மேற்கு – சமையன் புஞ்சை நிலம், வடக்கு – சர்வே எண். 106 ரோடு, தெற்கு – தி.கணபதிசேர்வை புஞ்சை நிலம். கிழக்கு மற்றும் தெற்கில் க.ராஜேந்திரன் பெயர் விடுபட்டுள்ளது. நான்குமாலில் உரிய ஆவணங்கள் இன்றி திருத்தம் செய்யப்பட்டால் அந்த ஆவணம் சட்டப்படி தவறானது என்றால் சரிதான். அதன் தொடர்ச்சியாக அதே சர்வே எண்ணில் பதிவு செய்யப்பட்ட மற்ற ஆவணங்களும் சட்டப்படி தவறானது என்றால் சரிதான். 11.02.2023, 09.06.2023 ஆகிய தேதிகளில் தேவராஜ் என்பவர் சார்பதிவாளர் மற்றும் விருதுநகர் மாவட்ட பதிவாளர் அவர்களிடமும் ஒரு புகார் மனு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டபடும் வா.சா.ஆ 26 மேற்படி புகார் மனு என்றால் சரிதான். அது விருதுநகர் மாவட்ட பதிவாளரிடம் கொடுக்கப்பட்டது. மேற்படி புகாரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று மாவட்ட பதிவாளரை விசாரித்தால் தான் தெரிய வரும். சட்டப்படி தவறான ஆவணங்களை ரத்து செய்வதற்கான அதிகாரம் தற்போது மாவட்ட பதிவாளரிடம் இல்லை. நீதிமன்றத்திற்கு தான் உள்ளது.

<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

சர்வே எண் 108/2 ல் சாட்சி சான்றாவணம் 1ன் படி பதிவு செய்யப்பட்ட முதல் பத்திரம் 174/1995 என்றால் சரிதான். இந்த சொத்தை

பொறுத்தவரை இந்த ஆவணம் தான் தாய் பத்திரம் என்றால் சரிதான். தாய் பத்திரத்தில் இருந்து எந்தவிதமான சீர்திருத்த பத்திரமும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாய் பத்திரத்தை சீர்திருத்தம் செய்யாமல் இதனை அடுத்து வரும் பத்திரங்களை சீர்திருத்தம் செய்தால் அது செல்லாது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் கடைசியாக சீர்திருத்தம் செய்யப்பட்ட 831/2023 பத்திரம் செல்லாது என்றால் சரிதான்.

**(5 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.